# காந்தள் மலர் (Glory Lily)

தாவரவியல் பெயர் : குளோரியோசா சூப்பர்பா
குடும்பம் : லில்லியேசியே

கண்வலிக்கிழங்கு, கலப்பைக்கிழங்கு என மாற்றுப் பெயர்களும் உண்டு.

காந்தள் மலருக்கு தாயகம் வெப்பமண்டல ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா.

## வேதிப்பொருட்கள்

காந்தள் மலர் / கண்வலிக்கிழங்கின் விதைகள் மற்றும் கிழங்குகளே பயன்பாட்டு பகுதி ஆகும். கோல்ச்சிசின் (Colchicine) மற்றும் குளோரியோசின் (Chloriocine) என்ற மருந்து வேதிப்பொருட்கள் கண்வலிக்கிழங்கில் உள்ள முக்கியமான வேதிப்பொருட்கள் ஆகும்.

## பயன்கள்

வாதம், மூட்டுவலி, தொழுநோய், குடற்புழுக்கள், வயிற்று உபாதை மற்றும் விஷக்கடிக்களுக்கு பயன்படுகிறது. கண்வலிக்கிழங்கின் விதைகளில் 0.20 % கால்ச்சிசின் மருந்து பொருள் உள்ளது மற்றும் கோல்ச்சிகோசைடு (Colchicoside) என்ற மருந்துபொருள் ஐரோப்பிய நாடுகளில் கௌட் (Gout) எனும் மூட்டுவலி நிவாரணத்திற்கு பயன்படுகிறது.

## மண் மற்றும் காலநிலை

நல்ல வடிகால் வசதியுள்ள செம்பொறை மண் ஏற்றது. மண்ணின் அமிலத்தன்மை (pH) 6-7ஆக இருத்தல் வேண்டும். காந்தள் மலர் ஒரு வெப்பமண்டல பயிர் என்பதால் கடல்மட்டத்திலிருந்து 600மீ உயரம் வரை வளரக்கூடியது. வெப்பநிலை $15^{o}$-$20^{o}$ செல்சியஸ் பகல் வெப்பமும் $10^{o}$-$15^{o}$ செல்சியஸ் இரவு வெப்பமும் மிகவும் ஏற்றது.

## பயிர்கெருக்க முறை (Propogation)

“V” வடிவ கிழங்கு (50-60 கிராம் எடையுள்ளது) மற்றும் விதைகள் மூலம் பயிர்பெருக்கம் செய்யலாம்.

**விதைக்கிழங்கு அளவு**

1500-3000 கிலோ விதைக்கிழங்கு ஒரு எக்டேர் பயிரிட தேவைப்படுகிறது. சராசரியாக 2000 கிலோ விதைக்கிழங்கு ஒரு எக்டேர் நிலத்திற்கு போதும்.

**விதைகிழங்கு நேர்த்தி**

விதை கிழங்கை நடுவதற்கு முன் 0.1% கார்பன்டிசம் பூசாண மருந்தில் நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

**பருவம்**

ஜுன்-ஜுலை மாதங்கள் மிகவும் ஏற்ற பருவங்கள்.

**இடைவெளி**

60 செ.மீ. (2 அடி) இடைவெளியில் 15 செ.மீ. ஆழம் அகலமுள்ள வாய்க்காளில் 30-45 செ.மீ. இடைவெளியில் கிழங்குகளை ஊன்ற வேண்டும். இவ்வாறு நடுவதால் ஒரு எக்டேர் நிலப்பரப்பில் 55,000 கொடிகள் பராமரிக்கப்படுகிறது.

**உரமிடுதல்**

அடியுரமாக ஒரு எக்டேருக்கு 15-20 டன் தொழுஉரம், 40 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து மற்றும் 75 கிலோ சாம்பல் சத்தும் இடவேண்டும். நடவு செய்த 6-8 வாரங்களில் 80 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும்.

**நீர்ப்பாசனம்**

கிழங்குகள் முளைவரும் தருணத்தில் தொடர்ந்து நீர்ப்பாய்ச்ச வேண்டும். முளைத்த பின்னர் பூக்கும்வரை நீர்ப்பாய்ச்சக் கூடாது. இது கிழங்குகள் அழுகுவதை தவிர்க்கும்.

**பின்செய் நேர்த்தி**

செடிகள் படர்ந்து வளர முளைத்து வரும் கொடிகளின் நுனிப்பகுதி சேதமடையாதவாறு குச்சிகள் நடவேண்டும். அயல் மகரந்த சேர்க்கை தினமும் காலை நேரங்களில் (8-11 மணி வரை) செய்து வந்தால் அதிக மகசூல் கிடைக்கும்.

**களை நிர்வாகம்**

தோட்டத்தைக் களைகள் இல்லாமல் சுத்தமாக வைக்க வேண்டும். முளை சேதமடையாதவாறு களையெடுக்க வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**

**லில்லி பூக்கள்** : இளந்தளிர்களின் அடியில் முட்டைகள் கூட்டமாகக் காணப்படும். அதிலிருந்து வெளிவரும் இளம்புழுக்கள் மிகுந்த சேதத்தை ஏற்படுத்தும். இதனை கட்டுப்படுத்த 0.2% மெட்டாசிட் பூச்சிக்கொல்லியை 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**பச்சைப்புழுக்கள்** : இந்த வகைப் புழுக்கள் பூக்களை உண்டு மிகுந்த சேதத்தை விளைவிக்கக் கூடியது. மெட்டாசிட் 0.2% பூச்சிக்கொல்லியை தெளித்து கட்டுப்படுத்தலாம்

**நோய்கள்**

**இலை கருகல் நோய்கள்** : தொடர்மழை மற்றும் பனிக்காலத்தில் அதிகமாகக் காணப்படும். இதனை கட்டுப்படுத்த மேன்கோசப் 3 கிராம்/லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

**கிழங்கு அழுகல் நோய்** : வடிகால் வசதி குறைவாக உள்ள மண்ணில் இந்நோய் தோன்றும். தாமிரப் பூசாணக் கொல்லி மருந்தை 2 கிராம்/லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**அறுவடை**

170-180 நாட்களில் (6 மாதங்களில்) காய்களை அறுவடை செய்யலாம். விளைந்த காய்கள் பச்சை நிறத்திலிருந்து இளம்பச்சை அல்லது பழுப்பு நிறமாக மாறி தோல் சுருங்கி காணப்படும்.

காய்களை 7-10 நாட்கள் நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர் விதைகளை வெயிலில் உலர்த்தி பின்னர் சாக்குப்பைகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்பலாம்.

**மகசூல்**

200-250 கிலோ/எக்டேர் உலர்த்த விதைகள் மற்றும் 300 கிலோ கிழங்குகள் கிடைக்கும்.